திருத்தப்பட்டது

**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**தே.செ.வெ.எண். 02** **நாள்: 16.03.2026**

**தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத்தேர்தல் – 2026 அறிவிப்பினைத் தொடர்ந்து, சென்னை மாவட்ட தேர்தல் அலுவலர்/ பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் திரு.ஜெ.குமரகுருபரன், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் தேர்தல் நடத்தை விதிகள் தொடர்பாக அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளுடனான ஆலோசனைக் கூட்டம் இன்று நடைபெற்றது.**

இந்திய தேர்தல் ஆணையத்தால் தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத்தேர்தல்-2026 தமிழ்நாட்டில் ஒரே கட்டமாக தேர்தல் நடைபெறும் என 15.03.2026 அன்று அறிவிக்கப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து, சென்னை மாவட்டத்தில் உள்ளடங்கிய 16 சட்டமன்றத் தொகுதிகளிலும் தேர்தல் நடத்தை விதிகள் தொடர்பாக அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளுடனான ஆலோசனைக் கூட்டம் மாவட்ட தேர்தல் அலுவலர்/ மாநகராட்சி ஆணையாளர் திரு.ஜெ.குமரகுருபரன், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் ரிப்பன் கட்டடக் கூட்டரங்கில் இன்று (16.03.2026) நடைபெற்றது.

**இதனைத்தொடர்ந்து, மாவட்ட தேர்தல் அலுவலர்/ மாநகராட்சி ஆணையாளர் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது :**

இந்திய தேர்தல் ஆணையத்தால் தமிழ்நாடு சட்டமன்ற பேரவைக்கான பொதுத் தேர்தல் 2026 தொடர்பான அறிவிக்கை 15.03.2026 அன்று வெளியிடப்பட்டுள்ளது.

**தேர்தல் அட்டவணை**

| | | |
|---|---|---|
| 1. | தேர்தல் அறிவிப்பு நாள் | 15.03.2026 |
| 2. | வேட்பு மனுத் தாக்கல் தொடங்கும் நாள் | 30.03.2026 |
| 3. | வேட்பு மனுக்கள் தாக்கல் செய்ய வேண்டிய கடைசி நாள் | 06.04.2026 |
| 4. | வேட்புமனுக்கள் மீதான பரிசீலனை நாள் | 07.04.2026 |
| 5. | வேட்புமனு திரும்பப் பெற கடைசி நாள் | 09.04.2026 |
| 6. | வாக்குப்பதிவு நாள் | 23.04.2026 |
| 7. | வாக்கு எண்ணிக்கை நாள் | 04.05.2026 |

அறிவிக்கை வெளியிடப்பட்ட நாளான 15.03.2026 அன்று முதல் மாதிரி நடத்தை விதிகள் அமுலுக்கு வந்துள்ளது.

தேர்தல் தொடர்பாக, 16 சட்டமன்றத் தொகுதிகளை உள்ளடக்கிய சென்னை மாவட்டத்திற்கான பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

- சென்னை மாவட்டத்திற்கு, மாவட்ட தேர்தல் ஆணையராக பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் நியமிக்கப்பட்டுள்ளார்,
- ஒவ்வொரு சட்டமன்றத் தொகுதிக்கும் ஒரு தேர்தல் நடத்தும் அலுவலர், ஒரு உதவி தேர்தல் நடத்தும் அலுவலர் மற்றும் ஒரு கூடுதல் உதவி தேர்தல் நடத்தும் அலுவலர் நியமிக்கப்பட்டுள்ளனர்

**சென்னை மாவட்டத்தில் சட்டமன்றத் தொகுதி வாரியாக வாக்காளர்களின் எண்ணிக்கை கீழ்க்கண்டவாறு உள்ளது.**

| வ. எண் | சட்டமன்றத் தொகுதிகள் | வாக்குச்சாவடி மையங்கள் | ஆண் வாக்காளர்கள் | பெண் வாக்காளர்கள் | மூன்றாம் பாலினம் | மொத்த வாக்காளர்கள் |
|---|---|---|---|---|---|---|
| 1. | எண்.11 டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர் | 246 | 93,576 | 1,02,201 | 79 | 1,95,856 |
| 2. | எண்.12 பெரம்பூர் | 298 | 1,07,995 | 1,14,726 | 71 | 2,22,792 |
| 3. | எண்.13 கொளத்தூர் | 286 | 99,607 | 1,07,607 | 37 | 2,07,251 |
| 4. | எண்.14 வில்லிவாக்கம் | 255 | 76,947 | 82,785 | 32 | 1,59,764 |
| 5. | எண்.15 திரு.வி.க. நகர் (தனி) | 223 | 85,724 | 93,008 | 61 | 1,78,793 |
| 6. | எண்.16 எழும்பூர் (தனி) | 200 | 65,677 | 69,149 | 53 | 1,34,879 |
| 7. | எண்.17 இராயபுரம் | 194 | 75,870 | 81,004 | 57 | 1,56,931 |
| 8. | எண்.18 துறைமுகம் | 192 | 58,221 | 58,620 | 55 | 1,16,896 |
| 9. | எண்.19 சேப்பாக்கம் – திருவல்லிக்கேணி | 235 | 79,412 | 84,396 | 58 | 1,63,866 |
| 10. | எண்.20 ஆயிரம் விளக்கு | 247 | 73,500 | 80,343 | 65 | 1,53,908 |
| 11. | எண்.21 அண்ணா நகர் | 273 | 87,325 | 94,029 | 48 | 1,81,402 |
| 12. | எண்.22 விருகம்பாக்கம் | 311 | 95,025 | 1,01,461 | 50 | 1,96,536 |
| 13. | எண்.23 சைதாப்பேட்டை | 282 | 96,950 | 1,03,685 | 62 | 2,00,697 |
| 14. | எண்.24 தியாகராயநகர் | 251 | 74,682 | 80,228 | 33 | 1,54,943 |
| 15. | எண்.25 மயிலாப்பூர் | 272 | 93,017 | 1,01,691 | 23 | 1,94,731 |
| 16. | எண்.26 வேளச்சேரி | 314 | 1,02,235 | 1,09,411 | 45 | 2,11,691 |
| | **மொத்தம்** | 4079 | **13,65,763** | **14,64,344** | **829** | **28,30,936** |

.

- சென்னை மாவட்டத்தில் 13,65,763 ஆண் வாக்காளர்கள், 14,64,344 பெண் வாக்காளர்கள் மற்றும் 829 இதர பாலினத்தவர்கள் ஆகமொத்தம் 28,30,936 வாக்காளர்களாக உள்ளனர்.

- 4,079 வாக்குச்சாவடிகளும் மற்றும் 6 துணை வாக்குச்சாவடிகளும் ஆக மொத்தம் 4,085 வாக்குச்சாவடிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளது. 978 இடங்களில் இவ்வாக்குச்சாவடிகள் அமைந்துள்ளது.
- 16 சட்டமன்றத் தொகுதிகளுக்கு, காவல் துறை பணியாளர்கள் மற்றும் தேர்தல் அலுவலர்கள் ஆகியோரைக் கொண்ட 375 மண்டலக் குழுக்கள் (Sector Officers) அமைக்கப்பட்டுள்ளது. இக்குழுக்கள் வாக்குப்பதிவு இயந்திரங்களை தயார் செய்யும் பணி, வாக்குப்பதிவு இயந்திரங்களை வாக்குச்சாவடிக்கு அனுப்பி வைத்தல் மற்றும் வாக்குப் பதிவு முடிவடைந்த பின்னர் வாக்கு எண்ணும் மையத்திற்கு கொண்டு செல்லுதல் ஆகிய பணிகளை மேற்கொள்ளும்.
- வாக்குச்சாவடி அலுவலர்கள் சுமார் 16,500 எண்ணிக்கையில் நியமிக்கப்பட உள்ளனர். இவர்களுக்கு சட்டமன்ற தொகுதி வாரியாக பயிற்சிகள் (through Training Centers) அளிக்கப்பட உள்ளது.
- ஒவ்வொரு சட்டமன்றத் தொகுதியிலும் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களை பாதுகாப்பாக வைப்பதற்கு கட்டடங்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளது. அந்தந்த சட்டமன்றத் தொகுதிக்கான மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் சுழற்சி முறைக்கு (Randamization) பிறகு அந்தந்த சட்டமன்றத் தொகுதிக்கு அனுப்பி வைக்கப்படும். அவ்வாறு அனுப்பி வைக்கப்படும் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் வேட்பாளர்கள் முன்னிலையில் பாதுகாப்பாக தேர்தல் பொருள்கள் வழங்கும் மையம் (Distribution Center) அமைக்கப்பட்டுள்ள பாதுகாப்பு அறையில் வைத்து பாதுகாக்கப்படும்.
- மத்திய மற்றும் மாநில அரசின் அமலாக்கத் துறை போன்ற பல்வேறு துறைகளில் தேர்தல் விதிமுறைகளை கண்காணிப்பதற்காக அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.
- 13,634 எண்ணிக்கையில் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் மற்றும் 6,349 கட்டுப்பாட்டு கருவிகளும் சரிபார்க்கப்பட்டு இருப்பில் உள்ளது.
- ஒவ்வொரு சட்டமன்றத் தொகுதிக்கும் 3 பறக்கும் படைகள் (FST) என்ற வீதம், 48 பறக்கும் படைகள் (FST) ஏற்படுத்தப்பட்டுள்ளது. மூன்று சுழற்சி முறைகளில் இக்குழுவினர் பணிகளை மேற்கொள்வார்கள். இந்த பறக்கும் படைகள் தேர்தல் விதிமீறல்கள் ஏதேனும் இருப்பின் அவற்றை கண்காணித்து அதன் மீது நடவடிக்கை எடுக்கும்.
- ஒவ்வொரு சட்டமன்றத் தொகுதிக்கும் 3 நிலையான கண்காணிப்புக் குழுக்கள் (SST) என்ற வீதம், 48 நிலையான கண்காணிப்புக் குழுக்கள் (SST) ஏற்படுத்தப்பட்டுள்ளது. மூன்று சுழற்சி முறைகளில் இக்குழுவினர் பணிகளை மேற்கொள்வார்கள். இந்த நிலையான கண்காணிப்புக் குழுக்கள், வாகன தணிக்கையில் ஈடுபடும். தேர்தல் விதிமீறல்கள் ஏதேனும் இருப்பின் அவற்றை கண்காணித்து அதன் மீது நடவடிக்கை எடுக்கும்.
- ஒவ்வொரு சட்டமன்றத் தொகுதிக்கும் 2 வீடியோ கண்காணிப்புக் குழு (VST) என்ற வீதம், 32 வீடியோ கண்காணிப்புக் குழுக்கள் (VST) ஏற்படுத்தப்பட்டுள்ளது. இரண்டு சுழற்சி முறைகளில் இக்குழுவினர் பணிகளை மேற்கொள்வார்கள். இந்த வீடியோ கண்காணிப்புக் குழுக்கள், கட்சிக் கூட்டங்கள் நிகழ்வுகளை பதிவு செய்யும். தேர்தல் விதிமீறல்கள் ஏதேனும் இருப்பின் அவற்றை கண்காணித்து அதன் மீது நடவடிக்கை எடுக்கும்.

- ஒவ்வொரு சட்டமன்றத் தொகுதிக்கும் தலா ஒரு குழு வீதம் 16 சட்டமன்றத் தொகுதிகளுக்கு 16 வீடியோ பார்வையிடும் குழுக்கள், 16 உதவி கணக்கு தணிக்கைக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளது.
- மாவட்டத் தேர்தல் அலுவலக ரிப்பன் கட்டடத்தில் கட்டுப்பாட்டு அறை அமைக்கப்பட்டுள்ளது
- மாவட்டத் தேர்தல் அலுவலக ரிப்பன் கட்டடத்தில் அமைக்கப்பட்டுள்ள இந்த கட்டுப்பாட்டு அறையில் மேற்குறிப்பிட்ட கண்காணிப்பு படைகளின் பணிகள் கண்காணிக்கப்படும்.
- மாவட்டத் தேர்தல் அலுவலக ரிப்பன் கட்டடத்தில் அமைக்கப்பட்டுள்ள கட்டுப்பாட்டு அறையில் கட்டணமில்லா தொலைபேசி எண் 1800 425 7012 என்ற தொலைபேசி நிறுவப்பட்டுள்ளது. பொது மக்கள் இத்தொலைபேசியின் வாயிலாக தேர்தல் தொடர்பான புகார்களை தெரிவிக்கலாம்.
- தேர்தல் தொடர்பான புகார்கள் சி-விஜில் (cVIGIL) என்ற செயலி உதவியுடன் சம்பந்தப்பட்ட கண்காணிப்பு படைகளுக்கு புகார்கள் விவரம் தெரிவிக்கப்பட்டு புகார் மீது 100 நிமிடங்களுக்குள் நடவடிக்கை எடுக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.
- வேட்பாளர்கள், சம்பந்தப்பட்ட தேர்தல் நடத்தும் அலுவலர் முன்பு தேர்தல் அறிவிக்கை வெளியிடப்படும் நாளிலிருந்து 30.03.2026 முதல் 06.04.2026 வரை (அரசு பொது விடுமுறை நாட்கள் நீங்கலாக) வேட்புமனுத்தாக்கல் செய்யலாம்.
- வேட்பாளர்கள் வேட்புமனுத்தாக்கலின் போது ரூபாய் 10,000/- முன்வைப்புத் தொகையாக செலுத்திட வேண்டும். பட்டியலினத்தவர் இத்தொகையில் 50 விழுக்காடு செலுத்தலாம்.
- வேட்பாளர்கள் அதிகபட்சம் ரூபாய். 40 இலட்சம் வரை செலவிடலாம்.
- மாதிரி நடத்தை விதிகள் நடைமுறையில் உள்ளதால், பொது மக்கள் ரூபாய் 10,000/- மதிப்புக்குள் பொருள்களை கொண்டு செல்லலாம், ரூபாய்.50,000/- வரை ரொக்கமாக கொண்டு செல்லலாம்,
- மேலே குறிப்பிட்டுள்ள தொகைக்கு அதிகமாக இருப்பின் உரிய ஆதரங்களுடன் கொண்டு செல்ல வேண்டும், தேர்தல் செலவினத்திற்காக என்று சந்தேகிக்கும் பட்சத்தில் பொருட்கள் மற்றும் ரொக்கம் பறிமுதல் செய்யப்படும்.
- தலைமை அலுவலகத்தில் மேல்முறையீடு குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இக்குழுவின் முன்பு உரிய ஆதரங்களை சமர்பிக்கும் பட்சத்தில் இக்குழுவானது அளிக்கப்படும் ஆதாரங்களின் அடிப்படையில் முடிவெடுத்து பறிமுதல் செய்யப்பட்ட பொருள்களை விடுவிக்கும்.
- தேர்தலுக்காக செலவிடப்படும் செலவினத்தை கணக்கீடு செய்ய விலைப்பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளது. இந்த விலைப்பட்டியலின் அடிப்படையில் வேட்பாளரின் தேர்தல் செலவீனம் கணக்கிடப்படும்.
- ஒற்றைச்சாளர முறையில் கூட்டங்கள் நடத்துவது, வாகனங்களை பயன்படுத்துவது போன்றவற்றிற்கு உரிய அனுமதியினை சம்பந்தப்பட்ட தேர்தல் நடத்தும் அலுவலர்களிடம் இருந்து பெற்றுக்கொள்ளலாம்.
- வேட்பாளர்கள் பொதுக்கூட்டங்கள், ஊர்வலங்கள் மற்றும் தற்காலிக கட்சி அலுவலகம் அமைத்தல் போன்ற ஆறு வகையான இனங்களுக்கு அனுமதி பெறுவதற்காக இந்திய தேர்தல் ஆணையத்தால் "Suvidha" என்ற செயலி வாயிலாக அனுமதி பெறும் நடைமுறையினை அறிமுகப்படுத்தியுள்ளது. இந்த இணையதளத்தின் முகவரி https://suvidha.eci.gov.in ஆகும்.

- வேட்பாளர்கள் மேற்கண்ட செயலியின் மூலம் விண்ணப்பம் செய்து கொள்ள வசதி ஏற்படுத்தி தரப்பட்டுள்ளது. இந்த இணையத்தின் வாயிலாக அனுமதி பெற, நிகழ்விற்கு 48 மணி நேரத்திற்கு முன்பே விண்ணப்பிக்க வேண்டும். அங்கீகரிக்கப்பட்ட கட்சிகளின் நிர்வாகிகளும், தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர் மற்றும் வேட்பாளர்களின் முகவர்கள் ஆகியோர் இந்த சுவிதா இணையதளத்தின் வாயிலாக விண்ணப்பிக்கலாம்.
- வாக்குப்பதிவு முடிவடைந்த பின்னர் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் வாக்கு எண்ணும் மையங்களுக்கு அனுப்பி வைக்கப்படும்,
- டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர், திரு.வி.க. நகர், இராயபுரம், துறைமுகம், சேப்பாக்கம்-திருவல்லிக்கேணி ஆகிய 5 சட்டமன்றத் தொகுதிகளுக்கு இராணி மேரி கல்லூரியிலும்,
- பெரம்பூர், கொளத்தூர், வில்லிவாக்கம், எழும்பூர், ஆயிரம் விளக்கு மற்றும் அண்ணா நகர் ஆகிய 6 சட்டமன்றத் தொகுதிகளுக்கு லயோலா கல்லூரியிலும்
- விருகம்பாக்கம், சைதாப்பேட்டை, தியாகராயநகர், மயிலாப்பூர் மற்றும் வேளச்சேரி ஆகிய 5 சட்டமன்றத் தொகுதிகளுக்கு கிண்டி அண்ணா பல்கலைக்கழகத்திலும் வாக்கு எண்ணும் மையங்கள் அமைக்கப்படவுள்ளது,
- தேர்தல் நடத்தும் அலுவலர்கள், தேர்தல் நடத்தும் அலுவலர் அலுவலக கட்டுப்பாட்டு அறை தொலைபேசி எண்கள், தேர்தல் நடத்தும் அலுவலர்களின் தொலைபேசி எண்கள் விவரம்

| வ. எண் | தேர்தல் நடத்தும் அலுவலர் மற்றும் முகவரி | கட்டுப்பாட்டு அறை தொலைபேசி எண்கள் | தேர்தல் நடத்தும் அலுவலரின் தொலைபேசி எண்கள் |
|---|---|---|---|
| 1. | திருமதி பி. பூங்கொடி<br>எண். 11. இராதாகிருஷ்ணன் நகர்<br>தண்டையார்பேட்டை மண்டல அலுவலகம்,<br>எண்.266 டி.எச். சாலை,<br>தண்டையார்பேட்டை, சென்னை-81 | 044-25900942<br>044-25900944 | 8925960711 |
| 2. | திருமதி எஸ். கீதா<br>எண். 12. பெரம்பூர்<br>டாக்டர் அம்பேத்கர் அரசு கலைக் கல்லூரி,<br>எண். 45, எருக்கஞ்சேரி உயர் சாலை,<br>வியாசர்பாடி, சென்னை – 39 | 044-25511664<br>044-25511599 | 8925960712 |
| 3. | திருமதி எஸ். சாந்தி<br>எண். 13. கொளத்தூர்<br>ஒருங்கிணைந்த பெருநகர சென்னை<br>மாநகராட்சி அலுவலகம்,<br>எண். 239, பேப்பர் மில்ஸ் சாலை, செம்பியம்,<br>சென்னை 11. | 044-26700433 | 8925960713 |

| | | | |
|---|---|---|---|
| 4. | திருமதி எல். மைதிலி<br>எண். 14. வில்லிவாக்கம்<br>சமுதாயக் கூடம், சிட்கோ நகர்,<br>4வது பிரதான சாலை, வில்லிவாக்கம்,<br>சென்னை-49 | 044-26173437 | 8925960714 |
| 5. | திரு. எஸ். பால் பிரின்சி ராஜ்குமார்<br>எண். 15. திரு.வி.க நகர்<br>திரு.வி.க நகர் மண்டல அலுவலகம்,<br>எண்.158 ஸ்ட்ரஹான்ஸ் சாலை, பட்டாளம்,<br>சென்னை – 12 | 044-26620114 | 8925960715 |
| 6. | திரு. என். சுரேஷ்<br>எண். 16. எழும்பூர்<br>எழும்பூர் வட்டாட்சியர் அலுவலகம், 88,<br>மேயர் ராமநாதன் சாலை, சேத்துப்பட்டு,<br>சென்னை - 31. | 044-28196021 | 8925960716 |
| 7. | திரு. ஆர். பன்னீர்செல்வம்<br>எண். 17. இராயபுரம்<br>இராயபுரம் மண்டல அலுவலகம்,<br>எண்.105, பேசின் பிரிட்ஜ் சாலை,<br>இராயபுரம், சென்னை-79, | 044-25200120 | 8925960717 |
| 8. | திருமதி டி. பரிதா பானு<br>எண். 18. துறைமுகம்<br>பாரதி அரசு மகளிர் கலைக் கல்லூரி,<br>எண்.1, பிரகாசம் சாலை, சென்னை - 108. | 044-25280015 | 8925960718 |
| 9. | திருமதி ஆர். சுகந்தி<br>எண். 19. சேப்பக்கம்-திருவல்லிக்கேணி<br>பல்நோக்கு மைய கட்டடம், பிரிவு 116,<br>எண்.43, புதிய எண் 22, டாக்டர். பெசன்ட்<br>சாலை, திருவல்லிக்கேணி, சென்னை -5 | 044-28451334 | 8925960719 |
| 10. | திருமதி ஐ. வளர்மதி<br>எண். 20. ஆயிரம் விளக்கு<br>தேனாம்பேட்டை மண்டல அலுவலகம்,<br>எண்:4, 4 ஆவது குறுக்குத் தெரு, | 044-28450574 | 8925960720 |

| | | | |
|---|---|---|---|
| | ஏரிப் பகுதி, நுங்கம்பாக்கம். சென்னை – 34 | | |
| 11. | திரு. பி. எம். செந்தில் குமார்<br>எண். 21. அண்ணா நகர்<br>அண்ணாநகர் மண்டல அலுவலகம்,<br>எண்.368, 2வது குறுக்குத் தெரு,<br>புல்லா அவென்யூ, ஷெனாய் நகர்,<br>சென்னை – 30 | 044-26641082<br>044-26641084 | 8925960721 |
| 12. | திரு. என். சத்திய நாராயணன்<br>எண். 22. விருகம்பாக்கம்<br>128 வார்டு அலுவலகம், எண். 77,<br>காமராஜர் சாலை, விருகம்பாக்கம்,<br>சாலிகிராமம் பேருந்து நிலையம் அருகில்,<br>சென்னை - 92. | 044-23771484 | 8925960722 |
| 13. | திரு. எஸ். வெங்கடேஷ்<br>எண். 23. சைதாப்பேட்டை<br>கிண்டி வட்டாட்சியர் அலுவலகம்,<br>69/40 அண்ணாசாலை லிட்டில் மவுண்ட்,<br>கிண்டி சென்னை-32 | 044-22351424 | 8925960723 |
| 14. | திரு. ஜி. சரவண மூர்த்தி<br>எண். 24. தியாகராயர் நகர்<br>கோடம்பாக்கம் மண்டல அலுவலகம்,<br>எண். 64, என்.எஸ்.கே. சாலை,<br>கோடம்பாக்கம், சென்னை-24, | 044-24838968 | 8925960724 |
| 15. | திருமதி பி. எஸ். விஜயலட்சுமி<br>எண். 25. மயிலாப்பூர்<br>மயிலாப்பூர் வட்டாட்சியர் அலுவகம்,<br>எண்: 28, பசும்பொன் முத்துராமலிங்கம்<br>சாலை, ஆர்.ஏ.புரம், சென்னை-28 | 044-28458775 | 8925960725 |
| 16. | திருமதி லட்சுமி பிரியா<br>எண். 26. வேளச்சேரி<br>தெற்கு வட்டார துணை ஆணையர்<br>அலுவலகம்,<br>அடையாறு மண்டல அலுவலகம்,<br>எண். 115, டாக்டர் முத்துலட்சுமி சாலை, | 044-24425962 | 8925960726 |

| | | | |
|---|---|---|---|
| | எல் பி சாலை, அடையாறு, சென்னை – 20 | | |

**தேர்தல் பணிகளை கண்காணிப்பதற்காக நியமிக்கப்பட்டுள்ள கூடுதல் மாவட்ட தேர்தல் அலுவலர்கள் விவரம்:**

| வ. எண் | கூடுதல் மாவட்ட தேர்தல் அலுவலர் / பொறுப்பு அலுவலர் | எண் மற்றும் சட்டமன்றத் தொகுதி |
|---|---|---|
| 1. | திருமதி ரஷ்மி சித்தார்த் ஜகடே, இ.ஆ.ப.,<br>கூடுதல் மாவட்ட தேர்தல் அலுவலர்/சென்னை மாவட்ட ஆட்சித் தலைவர்<br>9444131000 | வாக்குச்சாவடி அலுவலர்கள் மேலாண்மை மற்றும் பயிற்சி |
| 2. | திருமதி க. கற்பகம், இ.ஆ.ப.,<br>கூடுதல் மாவட்ட தேர்தல் அலுவலர்/இணை ஆணையாளர் (கல்வி)<br>9445190997 | எண்.16, எழும்பூர்<br>எண்.17, இராயபுரம் |
| 3. | திரு. ம. பிரதிவிராஜ், இ.ஆ.ப.,<br>கூடுதல் மாவட்ட தேர்தல் அலுவலர்/துணை ஆணையாளர் (வருவாய் (ம) நிதி)<br>9445190995 | எண்.22, விருகம்பாக்கம்<br>எண். 24, தியாகராய நகர் |
| 4. | திரு. வீ. ப. ஜெயசீலன், இ.ஆ.ப.,<br>கூடுதல் மாவட்ட தேர்தல் அலுவலர் / இணை ஆணையாளர் (சுகாதாரம்)<br>9445190996 | எண். 14, வில்லிவாக்கம்<br>எண்.21, அண்ணாநகர்<br>எண்.25, மயிலாப்பூர் |
| 5. | திரு. வி. சிவகிருஷ்ணமூர்த்தி, இ.ஆ.ப.,<br>கூடுதல் மாவட்ட தேர்தல் அலுவலர்/துணை ஆணையாளர் (பணிகள்)<br>9445190998 | எண்.13, கொளத்தூர்<br>எண்.15, திரு.வி.க.நகர்<br>எண். 18, துறைமுகம் |

| | | |
|---|---|---|
| 6. | திரு. கட்டா ரவி தேஜா, இ.ஆ.ப.,<br><br>கூடுதல் மாவட்ட தேர்தல் அலுவலர்/வடக்கு வட்டார துணை ஆணையாளர்<br><br>94450 25800 | எண்.11,<br><br>டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர் |
| | | எண்.12, பெரம்பூர் |
| 7. | திரு. அஃதாப் ரசூல், இ.ஆ.ப.,<br><br>கூடுதல் மாவட்ட தேர்தல் அலுவலர்/தெற்கு வட்டார துணை ஆணையாளர்<br><br>9445190100 | எண்.23, சைதாப்பேட்டை |
| | | எண்.26, வேளச்சேரி |
| 8. | திரு. எச். ஆர். கௌஷிக், இ.ஆ.ப.,<br><br>கூடுதல் மாவட்ட தேர்தல் அலுவலர்/மத்திய வட்டார துணை ஆணையாளர்<br><br>9445190150 | எண்.19, சேப்பாக்கம்-திருவல்லிக்கேணி |
| | | எண்.20 ஆயிரம் விளக்கு |

- சென்னை மாவட்டத்தில் காவல் துறையினரால் அனுமதி வழங்குவதற்காக நிர்ணயிக்கப்பட்டுள்ள இடங்களில் மட்டுமே அரசியல் கட்சிகள் கூட்டம் நடத்துவற்கு அனுமதி வழங்கப்படும்.
- அரசியல் கட்சிகள் மற்றும் பொது மக்கள் அனைவரும் தேர்தல் நன்னடத்தை விதிமுறைகளுக்குட்பட்டு, தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தலினை சுதந்திரமாகவும், நியாயமாகவும் நடத்திட ஒத்துழைப்பு நல்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

இக்கூட்டத்தில், கூடுதல் காவல் ஆணையாளர் (தலைமையிடம்) திரு.கே.ஜோசி நிர்மல் குமார், இ.கா.ப., , கூடுதல் மாவட்ட தேர்தல் அலுவலர்கள் திருமதி க. கற்பகம், இ.ஆ.ப., (இணை ஆணையாளர் (கல்வி)), முனைவர் வீ.ப.ஜெயசீலன், இ.ஆ.ப., (இணை ஆணையாளர் (சுகாதாரம்), திருமதி ரஷ்மி சித்தார்த் ஜகடே, இ.ஆ.ப., (சென்னை மாவட்ட ஆட்சித்தலைவர்), துணை ஆணையாளர்கள் திரு.வி.சிவகிருஷ்ணமூர்த்தி, இ.ஆ.ப., (பணிகள்), திரு.ம.பிரதிவிராஜ், இ.ஆ.ப., (வருவாய் (ம) நிதி), வட்டார துணை ஆணையாளர்கள் திரு.எச்.ஆர்.கௌஷிக், இ.ஆ.ப., (மத்தியம்), திரு.அஃதாப் ரசூல், இ.ஆ.ப., (தெற்கு), மாவட்ட வருவாய் அலுவலர் (தேர்தல்) திருமதி நா. பூஷ்ணாதேவி, அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் மற்றும் தேர்தல் நடத்தும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி**